077. 6602629 விவசாயபோதனாசிரியர்
உரும்பிராய்

கையேடு : 1

இலவச வெளியீடு

கத்தரி

வருடம் முழுவதும் பயன் பெறுவோம்

விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி,
நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு,
வட மாகாணம்.

நடுகைக் காலம்

வருடம் முழுவதும் பயிர் செய்யலாம்.

- சிறுபோகம் - மே முற்பகுதி
- பெரும்போகம் - மார்கழி இறுதிப்பகுதி

பயிரிடப்படும் இனங்கள்:

- திருநெல்வேலி ஊதா- உலர் வலயத்திற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (குறிப்பாக வடமாகாணத்திற்கு உகந்தது)
- எஸ்.எம்.164 - பக்ரீறியா வாடல் நோயைத் தாங்கி வளரும்.
- பாதகொட
- உள்ளூர் இனம் (ஈர்க்கு வெள்ளை, கத்திப்பிடியன், மட்டுவில் முட்டை, மட்டுவில் முட்டி, தம்பசிட்டி, மலப்பை, சங்குவேலி பச்சைமுகிழன்)
- கலப்பினம் - அஞ்சலி, அமன்டா, இசாபிஸ், ரவீனா

விதைகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்:

1. மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம்
   - திருநெல்வேலி (யாழ்ப்பாணம்)
   - எல்லப்பர் மருதங்குளம் (வவுனியா)
   - வண்ணாமோட்டை (மன்னார்)
2. அரசாங்க விதை உற்பத்திப் பண்ணை, வவுனியா
3. சிபார்சு செய்யப்பட்ட இனங்களின் நாற்றுக்களைப் பதிவு செய்யப்பட்ட நாற்று உற்பத்தியாளர்களிடமும் பெற்றுக்கொள்ள முடியும். (நாற்று உற்பத்தியாளர்களின் பட்டியலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் பார்வையிடலாம்).
4. உதவி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம்.
5. கலப்பின வர்க்கங்களின் விதைகளை விதை விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

குறிப்பு:

- கலப்பினத் தாவரத்தில் உருவான விதைகளை நடுகை செய்யக்கூடாது. ஆனால் உள்ளூர் இனங்களின் விதைகளையும், சிபார்சு செய்யப்பட்ட இனங்களின் விதைகளையும் மீள் நடுகைக்காகப் பயன்படுத்தலாம்.

மண்ணின் தன்மை

- எல்லாவகையான பயிர் வளர்ச்சிக்கு உகந்த மண்ணிலும் வளரும்.
- நீர் நன்கு வழியக்கூடிய மண் பயிர் வளர்ச்சிக்குச் சிறந்தது.
- மண் அமிலத்தன்மை உடையதாக இருக்கவேண்டும்.
  மண் pH 5.5 - 5.8 ஆக இருப்பது உகந்தது.

நிலம் பண்படுத்தல்

- மண்ணை 20 - 25 செ.மீ. ஆழ்த்திற்கு உழுது புரட்டி இரண்டு தடவைகள் தூர்வையாக்கவும்.

நடுகை இடைவெளி

- நடுகை இடைவெளி 90 செ.மீ. X 60 செ.மீ. (3′ X 2′)
- 185 நிலையங்கள் 100 சதுர மீற்றர் பரப்பில் அமைக்கலாம்.



பொதுவாகப் பயிரிடப்படும் நடுகை இடைவெளி

3′ x 3′



நடுகைக்குழி அமைத்தல்



மேல் மண்ணையும், எருவையும் நன்கு கலந்து நடுகைக்குழி தயாரித்து நீர் ஊற்றிவிடவும். 3 நாட்களின் பின்னர் நாற்றுக்களை நிலையங்களில் ஆணிவேர் நேராக இருக்க நாட்டவும்.

ஒரு நிலையத்திற்கான அடிக்கட்டு உரம்

யூரியா	பொஸ்பேற்று	பொட்டாசு
4 கிராம்	18 கிராம்	5 கிராம்

நடுகை



கத்தரியின் வளர்ச்சிப் பருவங்களும் 100 சதுர மீற்றர் பரப்பிற்குரிய பசளைப் பாவனையும்...



யூரியா	750 (கிராம்) (3 பால்ரின்)	750 (கிராம்) (3 பால்ரின்)	750 (கிராம்) (3 பால்ரின்)	750 (கிராம்) (3 பால்ரின்)
பொஸ்பேற்று	–	–	3250 (கிராம்) (11 பால்ரின்)	–
பொட்டாசு	850 (கிராம்)	–	850 (கிராம்)	–

அடிக்கட்டைப் பயிர்ச்செய்கை

காய்த்து ஓய்ந்துபோன முதிர்பயிரைக் கத்தரித்துப் பசளையிட்டு நீர் பாய்ச்சுவதன் மூலம் மீளவும் பயனைப் பெறலாம். அதற்கான வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

முதிர் பயிர்

கத்தரித்தல்
பசளையிடல்
நீர்ப்பாசனம்

மீள அறுவடை
ஆரம்பித்தல்

நீர்ப்பாசனம்

நீர்ப்பாசனத்தின் கீழ் பயிரிடும்போது மண் நீரைப் பிடித்து வைத்திருக்கும் தன்மையைப் பொறுத்து நீர்ப்பாசன இடைவெளி அமையும். மேலதிக நீர்ப்பாசனம் அடி அழுகல் ஏற்பட வழிசமைக்கும். 5 நாட்களுக்கு ஒரு தடவை நீர்ப்பாசனம் செய்வது உகப்பானது.

களை கட்டுப்படுத்தல்

- சிறப்பான வளர்ச்சிக்கும், விளைச்சலுக்கும், பீடை முகாமைத்துவத்திற்கும் உரிய நேரத்தில் களை கட்டுப்படுத்துவது அவசியம்.
- முதல் இரு மாதங்களும் களை கட்டுப்படுத்தவும்.
- 3, 6, 9, 12ஆம் வாரங்களில் களை கட்டுப்படுத்தல் பயிரின் சிறப்பான வளர்ச்சிக்கு உகந்தது.

பீடை முகாமைத்துவம்

01. காய் தண்டு துளைப்பான் புழுவின் தாக்கமா?

காய் தண்டு துளைப்பான் புழு

நிறைவுடலி

தாக்கத்தை எவ்வாறு இனங்காணலாம்?

- இளம் குருத்துக்கள் வாடியிருக்கும் குருத்தின் அடிப்பகுதியில் துளை காணப்படும்.

காய் தண்டு துளைப்பான் புழுவின் தாக்கத்திற்குள்ளான இளம் குருத்தின் தோற்றம்

- காய்களில் துளை காணப்படுவதுடன் துளையின் அருகே எச்சமும் காணப்படும்.

காய் தண்டு துளைப்பான் புழுவின் தாக்கத்திற்குள்ளான காயின் உட்புறத்தோற்றம்

காய் தண்டு துளைப்பான் புழுவின் தாக்கத்தைத் குறைத்தல்

1. தாக்கப்பட்ட பகுதிகளை கூரிய கத்தியால் வெட்டி அகற்றவும்.

2. கூட்டுப் புழுவை அழிக்க மண்ணை நன்கு கிளறிவிடவும்.
3. குருத்துக்களையும், பாதிக்கப்பட்ட காய்களையும், எரியும் நெருப்பிலிடவும் அல்லது ஆழமாகக் கிடங்கு வெட்டிப் புதைக்கவும்.

4. உலர்ந்த வாழை இலைகளால் 6" உயரத்திற்கு வேலியிடவும்.

5. சோளம், கம்பு வேலிப்பயிராகப் பயிரிடவும்.

6. இரசாயனப் பாவனை:

டெல்சா மெத்திறின் அல்லது பீற்றாசை புருத்திறின் பூச்சி நாசினிகளில் ஒன்றை சிபார்சு செய்யப்பட்ட அளவில் விசிறவும்.

கவனத்திற்கு

- அறுவடை செய்யக்கூடிய பருவத்திலுள்ள எல்லாக் காய்களையும் அறுவடை செய்தபின் பூச்சிநாசினியை விசிறவும்.

- விசிறி 14 நாட்களின் பின்பு காய்களை அறுவடை செய்யவும்.

(2) பச்சை இலைத்தத்தி (ஜேசிட்)

தத்தியின் தாக்கம் (இலை பாதிப்படைதல்)

- இலை மஞ்சளாகத் தொடங்கும், ஓரங்கள் கருகும், தோணி போன்று மேற்புறமாக வளையும்.

தத்தியின் பாதிப்பிற்குள்ளான இலையின் தோற்றம்

பச்சை இலைத்தத்தியின் கட்டுப்பாடு

- சிபார்சு செய்யப்பட்ட கிருமிநாசினி: இமிடொகுளோபிரிட் (அட்மயர்) 10 மில்லி லீற்றர் மருந்தை 10 லீற்றர் நீரில் கலந்து விசிறவும் அல்லது அசற்றாமிபிறிட் 10 கிராம் 10 லீற்றர் நீரில் கலந்து விசிறவும்.

பச்சை இலைத்தத்தியின் தாக்கத்திற்குட்படக்கூடிய பயிர்கள்:

(விருந்து வழங்கித் தாவரம்)

கத்தரி

வெண்டி

பாகல்

புடோல்



அறுவடை

10 - 12 கிழமைகளில் முதலாவது அறுவடை செய்யலாம். காய்கள் இனத்திற்குரிய பருமன், வயது அடைந்ததும் (அதாவது விதைகள் கடுமையான நிறத்திற்கு வரும் முன்பு). காய்கள் மென்மையாகவும், சதைப்பற்றாகவும் இருக்கும்போது கூரான கத்தியால் அறுவடை செய்யவும். 7 நாட்களுக்கு ஒரு தடவை அறுவடை செய்யவும்.

விளைச்சல்

1/4 ஏக்கருக்கான மொத்தச் செலவு (ரூபா)	23,000.00
1/4 ஏக்கருக்கான உற்பத்தி (கிலோ கிராம்)	2,500
1/4 ஏக்கருக்கான வருமானம் (ரூபா)	100,000.00

தொழில்நுட்ப ஆலோசனை:
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

Harikanan (Pvt.) Ltd., Jaffna.